வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com  மலர் : 06  11.09.2025 வியாழக்கிழமை  இதழ் : 254  பக்கங்கள் : 08




# ஜனாதிபதிகளின் சலுகைகளை நீக்கும் சட்டமூலம் நிறைவேறியது

கொழும்பு, செப்ரெம்பர் 11

**ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு 150 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.**

நேற்று புதன்கிழமை பாராளுமன்றில் இந்த சட்டமூலம் விவாதிக்கப்பட்டது. விவாதத்தின் முடிவில் இந்த சட்டமூலம் மீது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமா என்று சபாநாயகர் கேட்டார்.

ஆளும் கட்சியின் முதல்வர் பிமல் ரத்நாயக்க வாக்கெடுப்பை கோரினார்.

இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக 151 வாக்குக ளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டன.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவும் சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தார். இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஒரேயோர் எதிர்க்கட்சி எம். பி. இவரேயாவார்.

இதேநேரம், எதிர்க்கட்சியை சேர்ந்த பதுளை மாவட்ட எம். பியான சாமர சம்பத் தஸநாயக்க மாத்திரம் எதிராக வாக்களித்தார்.

இதன்படி, 1986 ஆம் ஆண்டு 04ஆம்இலக்க ஜனாதிபதிகளின் உரித்துச் சட்டத்தை இரத்துச்செய்யும் பொருட்டு இந்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. 1986 ஆம் ஆண்டு 4ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்து சட்டம் இந்தச் சட்டமூலத்தின் ஊடாக இரத்துச்செய்யப்படும்.

2ஆம் பிரிவின்படி, முன்னாள் ஜனாதிபதி, விதவையான 07



## மன்னார் மருத்துவமனைக்கு இந்தியா ரூ.60 கோடி நிதியுதவி

கொழும்பு, செப். 11

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவை நிர்மாணிக்கவும், அந்தப் பிரிவுக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கவும் இந்தியாவுடன் 60 கோடி ரூபாய் மானிய உதவி ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் 07

## வீட்டிலிருந்து வெளியேற ஆயத்தமாகிறார் மகிந்த

கொழும்பு, செப். 11

ஜனாதிபதி உரித்துரிமை (நீக்குதல்) சட்டம் நேற்று பாராளுமன்றில் நிறைவேறியதை அடுத்து விஜயராம மாவத்தையில் வசித்து வரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ வீட்டிலி ருந்து வெளியேறத் தயாராகி வருகிறார் என்று தென் னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி உரித்துரிமை (நீக்குதல்) சட்டம் பாராளுமன்றில் 150 மேலதிக வாக்குகளால் 07

## வலி. வடக்கு மீள்குடியேற்றம் வலிந்து தவிர்க்கப்படுவது ஏன்?

### சபையில் சிறீதரன் எம். பி. கேள்வி

கொழும்பு, செப். 11

நாட்டில் போர் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்த பின்னரும், யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்கு பிரதேச மக்களின் மீள்குடியேற்றம் வலிந்து தவிர்க்கப்பட்டு வருவது ஏன்? புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலத்தை அண்மித்துள்ள நிலையில், வலி. வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் சார்ந்து இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன - இவ்வாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற 07

## புதிய பயங்கரவாத சட்டம் இறுதி வரைவு அடுத்த வாரம்

கொழும்பு, செப். 11

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை வரைவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் இறுதி வரைவு அடுத்த வாரம் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை வரைவதற்காக அமைச்சரவையால் 07

## பாதிக்கப்பட்ட தமிழர் சர்வதேசத்தை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை!

### அமைச்சர் விஜித ஹேரத்துக்கு தமிழ் அரசு பதில்

யாழ்ப்பாணம், செப்.11

"ஆயுதப் போராட்டம் முடிவடைந்து 16 ஆண்டுகளானபோதும், எந்த உள்ளகப் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளும் இன்னமும் உருவாக்கப்படவில்லை. இந்தச் சூழலில், பாதிக்கப்பட்டவர்கள் சர்வதேச ஈடுபாட்டை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஜெனிவாவில் நடைபெறும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில் வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் அந்தக் கட்சி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

அந்தக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் 07

## பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான பிரேரணையை ஏற்றுக்கொள்ளமுடியாது!

### சபாநாயகர் நேற்று அறிவிப்பு

கொழும்பு, செப். 11

பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுக்கு எதிரான எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லா பிரேரணை ஒழுங்கற்றது என்றும் அதன் தற்போதைய வடிவத்தில் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் சபாநாயகர் பாராளுமன்றத்துக்கு நேற்று தெரிவித்தார்.

இந்தப் பிரேரணை கடந்த ஓகஸ்ட் 12ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சியின் 32 பாராளுமன்ற உறுப்பினர்களால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் 19ஆம் திகதி, அரசமைப்பு, பாராளுமன்ற நிலையியற் கட்டளை மற்றும் நிறுவப்பட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப இந்த விடயத்தைக் கவனமாக ஆராய்வதாக சபாநாயகர் அறிவித்தார்.

தமது முடிவை அறிவிக்கும்போது அரசியலமைப்பின் 42, 43 மற்றும் 44ஆவது பிரிவுகளை சபாநாயகர் சுட்டிக்காட்டினார். 07

## '13' முழுமையாக நடைமுறைக்கு; உடனடியாக மாகாண தேர்தல்கள்

### இலங்கை குறித்து பிரிட்டன், கனடா உட்பட 5 நாடுகள் கூட்டாக ஜெனிவாவில் புதிய தீர்மான வரைவு சமர்ப்பிப்பு

ஜெனிவா, செப். 11

இலங்கையில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதன் மூலம் உள்ளூர் நிர்வாகத்தை மதிக்கவும் வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் உட்பட அனைத்து மாகாண சபைகளும் இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படி திறம்பட செயல்படுவதை உறுதி செய்யவும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்று இலங்கை தொடர்பாக ஐ. நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள புதிய தீர்மான வரைவில் கோரப்பட்டுள்ளது.

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழிகளை சர்வதேச தரங்களுக்கு இணங்க அகழ்வதற்கு தேவையான நிதி, மனிதவளம் மற்றும் தொழில்நுட்ப வளங்களைப் பெறுவதற்கு சர்வதேச உதவியை நாடவேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை விவகாரத்தை கையாளும் பிரதான அனுசரணை நாடுகளான 07

## மனித உரிமைகள் என்ற பெயரில் இலங்கைமீது அரசியல் அழுத்தம்

### கண்டிக்கிறது ரஷ்யா

கொழும்பு, செப். 11

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை குறித்து கவலைப்பட வேண்டிய எந்தக் காரணமும் இல்லை என ரஷ்யா தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் என்ற பெயரில் இலங்கைமீது அரசியல் அழுத்தம் செலுத்தும் முயற்சிகள் கவலைக்குரியவை என்றும் அந்த நாடு கண்டித்துள்ளது.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனையின்அறிக்கைக்கு பதிலளிக்கும்போதே ரஷ்ய பிரதிநிதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறைகளுடன் பரஸ்பர மரியாதைக்குரிய ஒத்துழைப்பை 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப் பிணக்குகளை தீர்க்கும் நடமாடும் சேவை கரைச்சியில்!

கிளிநொச்சி, செப். 11

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் காணிப் பிணக்குகளை தீர்க்கும் வகையிலான பகுதி நாள் நடமாடும் சேவை நேற்று முன் தினம் நடைபெற்றது.

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிற்கு காணிப் பிணக்குகள் தொடர்பில் மக்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கும் நோக்கில் குறித்த நடமாடும் சேவை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனின் பங்கேற்புடன் பிரதேச செயலர் பிரிவுகளில் நடத்தப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் நேற்று முன் தினம் கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற குறித்த பகுதி நாள் நடமாடும் சேவையில் மக்களால் முன்வைக்கப்பட்ட 22 காணிப் பிணக்குகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

இவற்றுள் சட்ட மற்றும் நிர்வாக நடைமுறைக்கு அமைவாக 20 காணிப் பிணக்குகளுக்குகள் தீர்மானத்திற்கு கொண்டு வரப்பட்டன. ஏனைய இரு காணிப் பிணக்குகள் காணி அளவீடுகள், மேலதிக விசாரணைகள் ஊடாக அடுத்த பகுதி நாள் நடமாடும் சேவைக்கு கொண்டு வரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நடமாடும் சேவையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரும், வடக்கு மாகாண பதில் காணி ஆணையாளருமான அ.சோதிநாதன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நளாயினி இன்பராஜ், கிளிநொச்சி மாவட்ட காணிக்கான மேலதிக அரசாங்க அதிபர் பி.அஜிதா, கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன், வடக்கு மாகாண உதவி காணி ஆணையாளர் சிவப்பிரியா சுபாஸ்கரன், காணி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றிருந்தனர். (அ)



## நிமலராஜன் கொலை வழக்கு விசாரணை அறிக்கை விநியோகம்

வவுனியா, செப். 11

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் விசாரணை அறிக்கை மற்றும் கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கை நேற்று வவுனியா ஊடகவியலாளர்களால் விநியோகிக்கப்பட்டது.

வவுனியா இலுப்பையடி பகுதியில் வைத்து பொதுமக்கள், வர்த்தகர்கள், சாரதிகள் என பல தரப்பினருக்கும் குறித்த அறிக்கை விநியோகிக்கப்பட்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனுக்கும் வழங்கப்பட்டது. இதில் வவுனியா ஊடகவியலாளர்கள் பலர் கலந்து கொண்டனர். (அ)

## விவசாய உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு விவசாயிகளுக்கு உள்ளீடுகள் வழங்கல்!

கிளிநொச்சி, செப். 11

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் விவசாயிகளுக்கான விவசாய உள்ளீடுகள் மற்றும் வாயுத் துப்பாக்கிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்று மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் மாகாண பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் வி.சோதிலட்சுமி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மாவட்டத்தின் பெரும்போக உற்பத்தியை அதிகரித்தில் மற்றும் உவர் நிலங்களில் நெற்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் 05 விவசாயிகளுக்கு விதை நெல் மற்றும் வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்க விதை தானியங்கள் வழங்கப்பட்டன.

விவசாயப் பயிர்களை பாதுகாக்கும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து விவசாயிகளுக்கு வாயு துப்பாக்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் எஸ்.முரளிதரன், மாவட்ட விவசாயத் துறை சார்ந்த திணைக்களங்களின் தலைவர்கள் பதவி நிலை உத்தியோகத்தர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். (அ)

# வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பண்பாட்டு விழா பருத்தித்துறையில்









யாழ்ப்பாணம், செப். 11

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயல கமும் பிரதேச செயலக கலாசா ரப் பேரவையும் இணைந்து கொண்டாடிய 2025 ஆம் ஆண்டிற்கான பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் நடராசா திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபனும், சிறப்பு விருந்தினர்களாக, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் லாகினி நிருபராஷ் , மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் சுகுணலினி விஜயரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக மூத்த கலைஞர்களான வெ.முத்துச்சாமி மற்றும் திரு.மு. ஜெகநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

கலாபூஷணம் இளையமுத்து துரைமுத்து அரங்கில் இடம்பெற்ற இவ்வாண்டிற்கான பண்பாட்டு விழாவானது பல்வேறுபட்ட கலை இலக்கிய விழுமியங்களையும் உள்ளடக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச செயலக முன்றலில் இருந்து பண்பாட்டு ஊர்வலத்துடன் ஆரம்பமான இந் நிகழ்வில் உடுக்கி இசை (வடமராட்சி வடக்கு வாழ் கலைஞர்கள்), வரவேற்பு நடனம் (தொண்டைமானாறு அபிநயசுரபி நடன மன்றம்), கீர்த்தனை (ஞான சம்பந்தர் மன்றம்), காளிங்க நர்த்தனம் (பரத சிவாலய கலைமன்றம்), வில்லிசை (வள்ளி திருமணம்-வேணுகான சபாமன்றம்) நாடகம் (நட்பின் பரிசு வெ. முத்தச்சாமி குழுவினர்), பாரதி யின் நடனம் (பரதசுரபி கலாமன்றம) என்பன சிறப்பாக நடைபெற்றது.

கலைஞர்களுக்கான 'கலைப்பரிதி', இளங் கலைஞர்', 'இளங் கலைப்பரிதி' விருதுகள் மாவட்ட செயலரால் வழங்கப்பட்டதுடன், தேசிய கலை இலக்கியப் போட்டிகளின் பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

## மூன்று மோட்டார் சைக்கிள்களும் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்து!

மருதனார்மடத்தில் சம்பவம்



யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாணம் - காங்கேசன் துறை வீதியில் மருதனார்மடம் பகுதியில் 3 மோட்டார் சைக்கிள்களும் துவிச்சக்கரவண்டி ஒன்றும் மோதி விபத்து ஏற்பட்டது.

நேற்றுக் காலை 8 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

சைக்கிள் ஒன்று வீதியை கடக்க முற்பட்டவேளை பின் பக்கமாக வந்த மோட்டார் சைக்கிள் சைக்கிள் மீது மோதியது.

பின்னர் அந்த மோட்டார் சைக்கிள் நிலைகுலைந்து பக்கம் மாறி வலது பக்கம் சென்று எதிர்த்திசையில் வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மீது மோதியது.

விபத்தில் சிக்கியவர்கள் காயங்களுக்கு உள்ளாகி தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## வேலணையில் வாள்வெட்டு சம்பவம்; 10 நாள்களின் பின் சந்தேக நபர் கைது!

யாழ்ப்பாணம், செப். 11

வேலணை பகுதியில் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவத் துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தேடப்பட்டு வந்த நிலையில், பிரதான சந்தேக நபரை 10 நாள்களின் பின்னர் நேற்று முன் தினம் கைது செய்துள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 31 ஆம் திகதி வேலணை - அராலி சந்திக்கு அண்மையில் காரில் சென்ற ஒருவரை பட்டா ரக வாகனத் தில் சென்ற குழு ஒன்று வழி மறித்து வாளால் வெட்டி கடுங் காயங்களுக்கு உள்ளாக்கிவிட் டுச் தப்பிச் சென்றிருந்தது.

கடும் காயமுற்ற நபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலை யில் குறித்த வாள்வெட்டுடன் தொடர்புடைய குழுவை தேடி பொலிஸார் தீவிர நடவடிக்கையில் இறங்கியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பிர தான சந்தேகநபர் ஊர்காவற்றுறை பொலிஸ் அதிகாரி தலைமையிலான அணியினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேநேரம் குறித்த சம்ப வத்துடன் தொடர்புடைய ஏனைய நபர்களும் விரைவில் கைதுசெய்யப்படுவர் என தெரிவித்த ஊர்காவற்றுறை பொலிஸார், கைதான பிரதான நபர் விசாரணைகளின் பின்னர் ஊர் காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப் படுவர் என்றும் கூறினர். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
11.09.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 26
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணில் சொல்ல வருவது...?

அமெரிக்க நிறுவனங்களான கூகுள், பேஸ்புக், எக்ஸ் போன்றவை நாடுகளில் ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டவை. எனவே, இது தொடர்பில் அரசாங்கம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

நேபாள நிலைமைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். இதன்மூலம் ரணில் என்ன கூற வருகிறார்? அப்படியான ஆட்சி மாற்றம் ஒன்றை இலங்கையிலும் ஏற்படுத்த முடியும். அப்படியொன்று நடந்தால் கவலைப்பட்ட வேண்டாம் - நான் மக்களுடன் இருப்பேன் என்று கூறுகிறாரா அல்லது தன்னைக் கைது செய்த அரசாங்கத்தை மறைமுகமாக எச்சரிக்கிறாரா?

இப்போது இவ்வாறு கூறும் ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ காலத்தில் ஆட்சிகளை கவிழ்ப்பது எவ்வாறு என்று கற்றுக்கொள்வதற்காக அமெரிக்கா செல்வதாகவும் குறிப்பிட்டவர் என்பதையும் இந்த இடத்தில் குறித்துக்கொள்ள வேண்டும். அடிப்படையில் கூகுளோ அல்லது பேஸ்புக்கோ ஆட்சி மாற்றங்களில் ஈடுபடுவதில்லை. ஏனெனில், ஒரு நாட்டிலுள்ளவர் மத்தியில் சமூக ஊடங்களின் பயன்பாட்டுக்கான பிரசாரங்களை அவர்கள் மேற்கொள்வதில்லை.

அவற்றின் தேவை கருதியும் கவர்ச்சி கருதியும் இளைய தலைமுறையினர் அதனைப் பயன்படுத்துகின்றனர். அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் குறித்த நிறுவனங்கள் தீர்மானிக்கவில்லை. அரபு வசந்தம் என்று அழைக்கப்படும் மக்கள் எழுச்சியின்போதும் பேஸ்புக் தொடர்பில் இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அதாவது, அமெரிக்க உளவு நிறுவனமான சி. ஐ. ஏ. கடாபிக்கு எதிரான கிளர்ச்சியை திட்டமிடுவதற்கு முகநூலை பயன்படுத்தியதாகவும் கூறப்பட்டது.

ஆனால், இவ்வாறு கூறுமளவுக்கு விடயங்களில் உண்மை இருக்கிறதா என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. பெரும்பாலானவை ஊகங்களாகவே இருக்கின்றன. இப்போது ரணில் குறிப்பிடுவதும் அவ்வாறானதோர் ஊகம்தான். ஆனால், ஒரு குறித்த நாட்டில் இளைஞர்களை கையாள்வதற்கு சமூக ஊடகங்களை திட்டமிட்டுப் பயன்படுத்த முடியும். அத்துடன், அதன் மூலம் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தவும் முடியும். ஆனால், இவை எவையும் வெளியில் இருந்து வருவதில்லை. உள்ளுக்குள்தான் கருக்கொள்கின்றன.

நேபாளத்தின் நிலைமையும் அப்படித்தான். அறகலயவின் போது, இலங்கையிலும் இதன் தாக்கத்தை நாம் கண்டோம். ஆனால், பங்களாதேஷ், நேபாளம் போன்று இங்கு நிலைமைகள் பெருமளவுக்கு வன்முறையாக மாறவில்லை. ரணில் மீண்டும் பாராளுமன்றம் வரவுள்ளாரெனத் தகவல்கள் வெளியாகிவரும் நிலையில்தான், அவர் ஆட்சி மாற்றங்கள் தொடர்பில் கவனமாக இருக்குமாறு எச்சரிக்கிறார்.

# தமிழ் எழுத்தாளர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறி!

கொழும்பு, செப். 11

தேசிய நூலகம் மற்றும் ஆவண சேவைகள் சபை முதன்முறையாக தமிழ் மொழி எழுத்தாளர்களுக்கான டிப்ளோமா பாடநெறியை ஏற்பாடு செய்துள்ளதாக தேசிய நூலகம் மற்றும் ஆவணச் சேவைகள் சபையின் பணிப்பாளர் சேனானி பண்டார தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு வருடமும் சிங்கள, தமிழ் எழுத்தாளர்களால் பல்வேறு புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. ஆனால், அந்த நூல்களின் தரம் தொடர்பில் பல பிரச்னைகள் எழுந்துள்ளன. வெளியீட்டுத் துறையில் சேர்க்கப்படும் இந்த வெளியீடுகளின் தரம், உள்ளடக்கம், பௌதிக பூச்சுகளை உயர் மட்டத்துக்குக் கொண்டுவந்து இலங்கையில் நல்லதோர் எழுத்தாளர் மற்றும் வாசகர்களை உருவாக்கும் நோக்கில் இந்தப் பாடநெறி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் எழுத்தாளர்களுக்கு ஆதரவு அளிக்கப்படும் என்றும் குறைந்த வசதிகள் உள்ள நூலகங்களுக்கு ஆதரவு அளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட நூலக மற்றும் ஆவண சேவைகள் சபையின் உதவிப் பணிப்பாளர் மிஹிர அரவிந்த கருத்துத் தெரிவிக்கையில்,

"நாட்டில் தமிழில் மேற்கொள்ளப்படும் பணிகள் குறைவாகவே காணப்படுகின்றன. தமிழ் மொழி பற்றிய அறிவுள்ள எழுத்தாளர்களை தவிர புதிய எழுத்தாளர்களின் பற்றாக்குறை அதிகம் உள்ளது. தற்போதுள்ள தமிழ் மொழி புத்தகங்களில் பெரும்பாலானவை இந்திய புத்தகங்கள்.

இதன்படி, அறிஞர் குழுவை இணைத்து நாட்டில் தமிழ் மொழி இலக்கியத்தை உருவாக்கும் நோக்கில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு உதவித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இந்தப் பாடத்தின் அடுத்த பாடநெறி ஒக்ரோபரில் ஆரம்பமாகும். பாடநெறி பற்றிய கூடுதல் விவரங்களை தேசிய நூலகத்தின் வலைத்தளத்தில் இருந்து பெறலாம் - என்றார். (ஐ)

## யோகக்கலை கற்கைநெறி

யாழ்ப்பாணம், செப். 11

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உளமேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணி முதல் காலை 8.00 மணி வரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள இரு பாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. பயில விரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணையுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## அஸ்வெசும உதவி தொகை நாளை வைப்பிலிடப்படும்!

கொழும்பு, செப். 11

இந்த மாதத்துக்கான அஸ்வெசும உதவித் தொகை நாளை வெள்ளிக்கிழமை பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும் என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

ஆயிரத்து 120 கோடியே 16 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் 14 இலட்சத்து 12 ஆயிரத்து 574 பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, நாளை முதல் பயனாளிகள் தங்களது வங்கிக் கணக்குகள் மூலம் அஸ்வெசும உதவித் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும். (ஐ)


## பாடசாலைகளில் மாணவரை சேர்க்க சுற்றுநிருபம் வெளியீடு

கொழும்பு, செப். 11

பாடசாலைகளில் 2 ஆம் தரம் முதல் 11ஆம் தரம் வரை மாணவர்களை அனுமதிப்பதற்காக (தரம் 5 மற்றும் தரம் 6 தவிர்த்து) தயாரிக்கப்பட்ட 27/2025 சுற்றுநிருபம் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள 27/2025 ஆம் இலக்கம் கொண்ட சுற்றுநிருபத்தை https://moe.gov.lk/en/circulars/ இணையத் தளத்தினுள் பிரவேசிப்பதனூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்**
சமயோஜித புத்தியால் எல்லாப் பிரச்னைகளையும் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**மிதுனம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்கும். முயற்சிகள் பலிதமாகும்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். தடைகள் உடைப்படும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தேவையற்ற அலைச்சல்கள் அதிகரிக்கும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**கன்னி**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிப்புக் கூடும். திறமைகள் வெளிப்படும்.

**துலாம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளரின் ரசனையை புரிந்து கொள்வீர்கள். புதிய சூட்சுமங்களை உணர்வீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**தனுசு**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் வியாபாரத்தில் வரவு கணிசமாக உயரும். திருப்திகரமான சூழ்நிலை உருவாகும். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். தைரியமான முடிவுகள் எடுக்கும் நாள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி ஒத்துழைப்பார். புது அத்தியாயம் தொடங்கும் .

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப்போட்டு பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பால் லாபம் குறையும். வளைந்து போவது நல்லது.

# மண்டைதீவு கொலைகள் தொடர்பில் உடனடியான விசாரணை வேண்டும்!

## அநுரவுக்கு டக்ளஸ் அவசர கடிதம்

யாழ்ப்பாணம், செப். 11

மண்டைதீவு கொலைகள் தொடர்பாக வெளியாகியுள்ள கருத்துக்களின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்து மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்துமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் அவசர கடிதம் எழுதப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. ஊடகச் செயலாளர் சிறீகாந் பன்னீர்ச்செல்வம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவை விசாரிக்கப்படுமாயின் நாமும்

முழுமையாக ஒத்துழைப்பு வழங்க தயாராகவே இருக்கின்றோம் என்றும் அவர் கூறினார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்ற நிலையில், ஏற்கனவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளரின் அறிக்கையில் கடந்த காலங்களில் இந்த நாட்டில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக இலங்கை இராணுவத்தினரும் புலிகளும் விசாரிக்கப்படவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ள நிலையில்,

மக்கள் மத்தியில் அவை பேசுபொருளாக இருப்பதனை தவிர்க்கும் நோக்கிலும்,

கடந்த காலங்களில் இந்த நாட்டில் இடம்பெற்ற அனைத்து விடயங்களும் விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்படும் என்று தற்போதைய அரசாங்கம் தொடர்ச்சியாக சொல்லி வருகின்ற நிலையில், கடந்த காலங்களில் எமக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மீண்டும் பேசு பொருளாக்கி எம்மை அரசியல் களத்தில் இருந்து முழுமையாக அகற்ற வேண்டும் என்று உள்ளூர் விரும்புகின்ற பிரகிருதிகளும், இதன்மூலம் புலி ஆதரவு தரப்பினரை மகிழ்விக்க முடியும் என்று கணக்கு போடுகின்றவர்களும், தங்களுடைய அனைத்து வளங்களையும் பயன்படுத்தி எமக்கு எதிரான செயற்பாடுகளை, பிரசாரங்களை முன்னெடுத்து வருவதை அவதானிக்ககூடியதாக இருக்கின்றது.

அதற்காக, கடந்த காலங்களில் எமது கட்சியின் செயற்பாட்டாளர்களாக இருந்து கட்சி நிலைப்பாடுகளுக்கு மாறாக சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டதன் காரணமாக கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட சிலர் விலைக்கு வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதையும் அவதானித்து வருகின்றோம்.

தன்னுடைய வாழ்நாளையே தமிழ் மக்களுடைய அபிலாசைகளுக்காக அர்ப்பணித்து மானசீகமாக மக்களுக்காக உழைத்து வருகின்ற - தன்னை நோக்கி வருகின்ற சவால்களை எல்லாம் எதிர்கொள்ளும் நெஞ்சுரம் மிக்க தலைமைத்துவ ஆளுமையான தோழர் டக்ளஸ் தேவானந்தாவை தலைமையாக கொண்டு செயற்படுகின்ற நாம் இவ்வாறான சமூக ஊடக பரபரப்புக்களை அலட்டக்கொள்ளவில்லை.

எமக்கு எதிரான குற்றசாட்டுக்கள் அனைத்தும் அந்தந்தக் காலப் பகுதில் எமக்கு எதிராக சுமத்தப்பட்ட பொய்கள் என்பதை உறுதியாக சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்-என்றார்.

(அ-05)

# முல்லைத்தீவில் வெளிச்சவீடு வேண்டும்!

## ரவிகரன் எம்.பி கோரிக்கை

கொழும்பு, செப். 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெளிச்சவீடு இன்மையால் மீனவர்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவருவதாகச் சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், எனவே முல்லைத்தீவில் வெளிச்சவீடொன்று அமைக்கப்படவேண்டுமென கடற்றொழில் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் வெளிச்சவீடு அமைப்பது தொடர்பில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவில் தீர்மானமொன்றை நிறைவேற்றி அனுப்புமாறும், தம்மால் வெளிச்சவீடு அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பிரதி அமைச்சர் ரத்ன கமகே ஆகியோரால் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கடற்றொழில் அமைச்சின் ஆலோசனைக்குழுக் கூட்டத்திலேயே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு மணற்குடியிருப்பு கடற்கரைப்பகுதியில் கடந்த 1950ஆம் ஆண்டு காலப் பகுதியில் கட்டப்பட்ட வெளிச்சவீடொன்று காணப்பட்டது.

இந்த வெளிச்சவீட்டினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் 74 கிலோ மீற்றர் தூரமான கரையோரத்தில் கொக்கிளாய் தொடக்கம் பேப்பாரப்பிட்டி வரையிலுள்ள மீனவர்கள் பயனடைந்து வந்தனர்.

குறித்த வெளிச்சவீட்டின் உதவியுடனேயே மீனவர்கள் தொழிலுக்குச் சென்று தமது மீன்பிடித் துறைகளுக்கு கரை திரும்பி வந்தனர்.

இவ்வாறாக மீனவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகவிருந்த இந்த வெளிச்ச வீடு கடந்த 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்துடன் முற்றாக அழிவடைந்துள்ளது.

எனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது மீனவர்கள் வெளிச்சவீடின்றி பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங் கொடுத்துவருகின்றனர்.

எனவே மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னையைக் கருத்தில் கொண்டு கடற்றொழில் அமைச்சு முல்லைத்தீவில் வெளிச்சவீடொன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்-என்றார்.

(அ)

# நிஷாந்தவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, செப். 11

முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்னவை செப்ரெம்பர் 24 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பொல்கஹவெல நீதவான் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்ன நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடற்படைத் தளபதியாக நிஷாந்த உலுகேதென்ன கடமையாற்றிய காலத்தில் குருநாகல் - பொத்துஹெர பிரதேசத்தில் இளைஞன் ஒருவன் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில், நிஷாந்த உலுகேதென்ன கடந்த ஜூலை மாதம் 28 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார். நீதிமன்ற உத்தரவின் கீழ் அவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 106 நீதித்துறை அதிகாரிகள் இடமாற்றம்

கொழும்பு, செப். 11

நீதித்துறை அதிகாரிகள் 106 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நீதிச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த இடமாற்றம் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றத்தில் மாவட்ட நீதிபதிகள், நீதவான்கள் மற்றும் நீதிமன்ற பதிவாளர்கள் ஆகியோர் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்ட நீதவான்களில் மாளிகாகந்த நீதவான் லோச்சனா அபேவிக்ரம வீரசிங்க, மஹர நீதவான் எச். ஜி.ஜே.ஆர். பெரேரா, குருணாகல் நீதவான் என்.டி.பி. குணரத்ன, காலி நீதவான் ஐ.என். என். குமாரகே மற்றும் பலப்பிட்டிய நீதவான் ஆர்.டி.ஜனக ஆகியோர் உள்ளடங்குவதாக நீதிச் சேவை ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் நீதி, பொறுப்புக்கூறலுக்கு அமெரிக்க காங்கிரஸ் முழு ஆதரவு!

## உறுப்பினர் ராஜா கிருஷ்ணமூர்த்தி

கொழும்பு, செப். 11

**செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் கரிசனையை வெளிப்படுத்துவதாகவும் தமிழர்களின் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான வலியுறுத்தலை தாம் ஆதரிப்பதாகவும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.**



செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ராஜா கிருஷ்ணமூர்த்தி, இலங்கையில் எலும்புக்கூடுகள், சிறுவர்களின் உடைகள் மற்றும் குழந்தைகளின் பால் போத்தல் உள்ளிட்ட பொருட்களுடன் அடையாளம் காணப்பட்ட மனிதப்புதைகுழியானது யுத்தகாலத்தில் இடம்பெற்ற அட்டூழியங்களை நினைவுறுத்தும் வகையில் அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதி நிலைநாட்டப்படுவதுடன் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் சுயாதீன விசாரணையையும், உண்மையான பொறுப்புக்கூறலையும் கோருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இத்தகைய மீறல்களால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்துக்கு வட கரோலினா ஒரு வீடாக இருப்பதனையிட்டுப் பெருமிதமடைவதாகவும், இந்த மனிதப்புதைகுழி அகழ்வை அடுத்து அதுபற்றித் தன்னைத் தொடர்புகொண்டு பேசிய தனது தொகுதி மக்களை நினைத்துப்பார்ப்பதாகவும் காங்கிரஸ் உறுப்பினரான டெபோரா ரோஸ் அவரது எக்ஸ் தளப்பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி தமிழர்களின் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான வலியுறுத்தலை தான் ஆதரிப்பதாகவும் அவர் அப்பதிவில் தெரிவித்துள்ளார். (அ)

# மின் கட்டணத் திருத்தம் குறித்து மக்கள் கருத்து தெரிவிக்க வசதி

கொழும்பு, செப். 11

2025 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டுக்கான மின்சாரக் கட்டணத்தில் 6.8 வீத அதிகரிப்பை இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முன்மொழியப்பட்ட திருத்தம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைப் பெற இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

அதன்படி, பொதுமக்கள் தங்கள் கருத்துகளையும் பரிந்துரைகளையும் எழுத்துப்பூர்வமாக ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாய்மூல கருத்துகளுக்காக 9 மாகாணங்களை உள்ளடக்கிய 9 பொது ஆலோசனைகள் நடத்தப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாய்மூல கருத்து அமர்வுகள் எதிர்வரும் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பொது மக்களின் எழுத்துப் பூர்வ ஆலோசனைகள் மற்றும் கருத்துகளையும் பின்வரும் வழிகள் மூலம் ஒக்ரோபர் மாதம் 07ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கலாம் என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மின்னஞ்சல் - mailto:info@pucsl.gov.lk

வட்ஸ்அப் - 076 427 1030

பேஸ்புக் - www.facebook.com/pucsl

தபால் -

மூன்றாவது மின்சார கட்டணம் குறித்த பொது மக்கள் ஆலோசனை 2025

இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக் குழு

6ஆவது மாடி, இலங்கை வங்கி வணிக கோபுரம்,

கொழும்பு 3. (அ)

# ரவிராஜ் படுகொலை வழக்கிலும் சந்தேக நபராக சம்பத் மனம்பேரி!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 11

ஐஸ் போதைப்பொருள் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு கொள்கலன்களில் மூலப்பொருட்களை மறைத்துவைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட சம்பத் மனம்பேரி என்ற சந்தேகநபர் முன்னாள் பொலிஸ் புலனாய்வு அதிகாரி என அடையாளம் காணப்பட்டுள்ளார். அத்தோடு அவர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கிலும் சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டுள்ளார் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தற்போது காவலில் உள்ள மற்றும் கைது செய்யத் தேடப்படும் இரண்டு நபர்களும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் தொடர்புடையவர்கள். இவர்கள் இருவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பொதுஜன பெரமுன அந்த குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டதால் தான் அவர்களை கட்சியிலிருந்து நீக்கியுள்ளனர். எவ்வாறிருப்பினும் அது மாத்திரம் போதாது.

அவரை பொலிஸில் ஒப்படைத்து சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பொதுஜன பெரமுன ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

சம்பத் மனம்பேரி என்ற குறித்த சந்தேகநபர் நீண்ட காலம் பொலிஸ் கான்ஸ்டபிளாகவும், பின்னர் குறுகிய காலம் புலனாய்வுத்துறை அதிகாரியாகவும் செயற்பட்டிருக்கின்றார்.

பொலிஸார் அவரை தேடும் பணிகளை தீவிரமாக முன்னெடுத்துள்ளனர். விரைவில் அவர் கைது செய்யப்படுவார்.

அவர்கள் வழங்கும் வாக்குமூலம், சாட்சியங்களுக்கமைய இவற்றுடன் தொடர்புடைய மேலும் பலர் கைது செய்யப்படுவர். சந்தேகநபரது குடும்பத்துடன் தங்காலை, மீதெனிய மற்றும் அம்பாந்தோட்டை போன்ற பகுதிகளில் உள்ள அரசியல்வாதிகள் நெருக்கமாக தொடர்பு வைத்துள்ளனர்.

எனவே, நாமல் ராஜபக்ஷ உட்பட பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் செய்யக்கூடிய மிகப்பெரிய விடயம், சம்பத் மனாம்பேரியை பொலிஸாரிடம் ஒப்படைப்பதாகும்-என்றார்.

# எல்ல விபத்து; பஸ்ஸின் உரிமையாளர் கைது!

கொழும்பு, செப். 11

எல்ல-வெள்ளவாய பிரதான வீதியில் அண்மையில் நடந்த விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு எல்ல-வெள்ளவாய வீதியின் 24ஆவது மைல்கல் அருகே பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்ததில் இந்த விபத்து நிகழ்ந்தது.

இதில் 15 பேர் உயிரிழந்தனர், மேலும் 17 பேர் காயமடைந்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களில் பஸ் ஓட்டுநரும் ஒருவர்.

விபத்துக்கு முன்னர் அவர் ஏதேனும் போதைப்பொருட்களை உட்கொண்டாரா என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

இறந்தவர்களில் 12 பேர் தங்காலை நகர சபை ஊழியர்கள்.

இதற்கிடையில், காயமடைந்தவர்களில் 11 பேர் இன்னும் பதுளை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார். (அ)

# நேபாளத்திலிருந்து வெளியேறவுள்ள இலங்கை யாத்திரீகர்கள்!

கொழும்பு, செப். 11

இந்தியாவில் இருந்து சாலை வழியாக லும்பினிக்கு பயணித்த 73 இலங்கை யாத்திரீகர்கள் கொண்ட குழு நேபாளத்திலிருந்து வெளியேற்றப்பட உள்ளது.

நேபாளத்தை விட்டு வெளியேறத் தயாராகும் வகையில் யாத்திரீகர்கள் இந்தியா-நேபாள எல்லையில் இருப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேபாள குடிவரவு அதிகாரிகளின் அமைப்பு செயல்படாததால், நடைமுறைகளை விரைவுபடுத்துவதற்காக இலங்கை தூதரக அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் அவர்களுடன் தொடர்பில் உள்ளனர்.

அங்குள்ள தூதரகத்தின் தகவலின்படி, நேபாள இராணுவம் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. மேலும் மக்கள் வீட்டிலேயே இருக்குமாறு ஏற்கனவே ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

காத்மாண்டுவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் தகவலின்படி, நேபாளத்தில் வசிக்கும் இலங்கையர்களின் எண்ணிக்கை 102 என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# 350 பொலிஸ் அதிகாரிகள் கடந்த ஆண்டு இடைநீக்கம்!

கொழும்பு, செப். 11

கடந்த ஆண்டில் சுமார் 350 பொலிஸ் அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பொலிஸ் துறையை அரசியலற்றதாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட அதிகாரிகள் குழு ஒன்று இவ்வாறு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரியில் நடைபெற்ற பயிற்சி பொலிஸ் அதிகாரிகள் குழுவிற்கான பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதவேளை, இந்த நிகழ்வில் பேசிய பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பொலிஸ் சேவைக்குள் நீதியான அதிகாரிகள் குழுவை உருவாக்குவதே தனது முதன்மையான நோக்கம் என்று கூறினார். (அ)

# கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகமாக ஆர்.ஏ.டீ.எஸ்.ரணதுங்க!

கொழும்பு, செப். 11

கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் பதவிக்கு ஆர்.ஏ.டீ.எஸ்.ரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் பதவியில் கடமையாற்றிய யூ.பி.றோஹண ராஜபக்ஷவின் பதவிக்காலம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 08 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

அதற்கமைய, தற்போது கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றும் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான ஆர்.ஏ.டீ.எஸ்.ரணதுங்க ஒக்ரோபர் மாதம் 09 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் பதவிக்கு நியமிப்பதற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# 10 மாதங்களுக்கு மூடப்படுகிறது கொழும்பு மத்திய பஸ் முனையம்!

கொழும்பு, செப். 11

இலங்கை போக்குவரத்துச் சபையின் கொழும்பில் உள்ள மத்திய பஸ் முனையம் இன்று முதல் 10 மாத காலத்திற்கு மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முனையத்தின் புனரமைப்புப் பணிகள் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் முடியும் வரை புறக்கோட்டை, போதிராஜ மாவத்தை, குணசிங்கபுர மற்றும் பஸ்ரியன் மாவத்தை ஆகிய இடங்களில் இருந்து இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் இயக்கப்படும் என்று போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பி.எச்.ஆர்.டி. சந்திரசிறி தெரிவித்தார்.

இந்தக் காலகட்டத்தில் புனரமைப்புப் பணிகளை இலங்கை விமானப்படை மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினார்.

ஒருங்கிணைந்த கால அட்டவணையின் கீழ் உள்ளவை உட்பட நீண்ட தூர பஸ்கள் பஸ்ரியன் மாவத்தை பஸ் பணிமனையில் இருந்து இயக்கப்படும் என்றும், ஏனைய குறுகிய தூர பஸ்கள் போதிராஜா மாவத்தையில் இருந்து இயக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அரசாங்கத்தின் கிளீன் சிறீலங்கா தேசிய திட்டத்தின் கீழ் இந்தப் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எதிர்வரும் 15 ஆம் திகதி ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் தலைமையில் இந்தப் புனரமைப்புத் திட்டம் அதிகாரபூர்வமாகத் தொடங்கப்படும்.

ஒரு வருடத்துக்குள் முடிக்க எதிர்பார்க்கப்படும் இந்தத் திட்டத்துக்காக 540 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் படுகொலை!

## மருதமுனையில் நேற்று அதிகாலை சம்பவம்

அம்பாறை, செப். 11

அம்பாறையில் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருதமுனை பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞன் ஒருவன் கொலை செய்யப்பட்டுள்ளதாக பெரியநீலாவணை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் நேற்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இளைஞனுக்கும் அயல் வீட்டுக்காரனுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த இளைஞன் கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபரான அயல் வீட்டுக்காரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் பிறப்பு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

திருமலை, செப். 11

திருகோணமலை - மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் பிறப்புச் சான்றிதழ் இல்லாதோருக்கான பிறப்புச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் முபாறக் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

போர் மற்றும் ஏனைய காரணங்களினால் பிறப்புச் சான்றிதழ் பெறாமல் இருந்த மூதூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 80 நபர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. காணி ஆவணங்கள் பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன. கிழக்கு மாகாண பிரதிபதிவாளர் நாயகம், மூதூர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், மூதூர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், காணி உத்தியோகத்தர் என பலரும் சேவையில் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சம்மாந்துறை நெய்னாகாடு பகுதியில் நீரில் மூழ்கி 2 வயது சிறுவன் மரணம்!

அம்பாறை, செப். 11

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெய்னாகாடு பகுதியில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை 2 வயதுடைய சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மரணமடைந்த சிறுவன் சிறாஜ் முகம்மட் ஸயான் ஸகி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக சம்மாந்துறை நீதிமன்ற நீதிவானின் உத்தரவின் பேரில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச்.அல்-ஜவாஹிர் விசாரணைகளை மேற்கொண்டார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# மிதிவெடி கண்டுபிடிப்பு

திருமலை, செப். 11

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் - செல்வநகர் பகுதியிலுள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான வெற்றுக் காணியிலிருந்து மிதிவெடி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

மாடு மேய்ப்பதற்காக சென்ற ஒருவர் வெளியில் தெரியும் வகையில் புதைக்கப்பட்ட நிலையில் மிதிவெடி இருப்பதைக் கண்டு சேருநுவர பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதன் பின்னர் பொலிஸார், கிராம உத்தியோகத்தர், மிதிவெடி அகற்றும் பிரிவினர் மிதிவெடி இருக்கும் இடத்தை பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

அத்தோடு மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் அனுமதியைப் பெற்று இவ் மிதிவெடி விசேட அதிரடிப்படையினரால் அகற்றப்பட உள்ளதாகவும் சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனப் பேச்சு ஆரோக்கியமானது

## பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்

கொழும்பு, செப். 11

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான வேதன அதிகரிப்பு தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தை ஆரோக்கியமாக அமைந்ததாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பெருந்தோட்ட அமைச்சில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு விடயத்தில் முதலாளிமார் தங்களது நிலைப்பாட்டினை வெளிப்படுத்துவதற்கு சம்மேளனம் ஒரு மாத கால அவகாசத்தைக் கோரியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவ படகோட்டிகளுக்கு பயிற்சிப்பட்டறை

கல்முனை, செப். 11

அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர் சங்கம், கல்முனை கிராமிய மீனவர் அமைப்பு ஆகியன இணைந்து நடத்திய படகோட்டிகளுக்கான பயிற்சிப் பட்டறையின் இறுதி நாள் நிகழ்வு கல்முனை மயோன் பிளாஸா மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

03 நாட்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சிப்பட்டறையின் இறுதி நாள் நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில், கல்முனை ஆழ்கடல் கிராமிய அமைப்பின் செயலாளரும் தேசிய மக்கள் சக்தியின் கரையோர சங்கங்களின் அமைப்பாளர் எம்.ஜே.எம். ஜெஸீல், அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர் சங்கத்தின் தலைவர் எம்.எஸ். அப்துல் ஹமீத், அதன் செயலாளர் மற்றும் பொருளாளர் உட்பட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (எ)

# திருக்கோவில் உதவிப் பிரதேச செயலராக சுவாகர் பதவியேற்பு

அம்பாறை, செப். 11

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் ரெட்னம் சுவாகர் நேற்று புதன்கிழமை திருக்கோவில் பிரதேச செயலகத்தின் நிரந்தர உதவி பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் முன்னிலையில் அவர் தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றார்.

பதவியேற்பு விழாவில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் எஸ். திரவியராசாவும் கலந்து கொண்டார். (அ)

# வெள்ளத்தில் கண்டி!

கொழும்பு, செப். 11

கண்டி நகர் உட்பட மலையகப் பகுதிகளில் பல்வேறு இடங்களில் பெய்த கடும் மழையினால் ஆங்காங்கே பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கண்டியில் ரயில் நிலையம் உட்பட வீதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அதே நேரத்தில் கட்டுகஸ்தோட்டைக்கும் மஹையாவவுக்கும் இடையிலான வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியமையினால் பல மணிநேரம் போக்குவரத்து தடையும் ஏற்பட்டது. இதனால் வாகன சாரதிகள் உட்பட பொதுமக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கினர்.

இதேவேளை மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பெய்த கடும் மழையினால் மாணவர்கள் உட்பட தோட்டத் தொழிலாளர்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியிருந்தனர். வீதிகளில் அதிகளவான வெள்ள நீர் தேங்கியுள்ளமையால் மக்கள் கால்நடையாக செல்வதற்கும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியிருந்தனர். (அ)

# மலையக அதிகார சபையை ஒழிப்பது பெரும் துரோகம்!

## பழனி திகாம்பரம் சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 11

மலையக அதிகார சபையினை இல்லாமலாக்க முயற்சிப்பது பெரும் வரலாற்று துரோகமாகும் என முன்னாள் அமைச்சரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

லையக அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பில் அவர் விடுத்திருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

200 வருட காலத்தில் மலையக பெருந்தோட்ட மக்களுக்கென அவர்களின் தேவையறிந்து சேவையாற்றுவதற்கென ஒரு அரச நிறுவனம் இருக்கவில்லை.

நல்லாட்சி காலத்தில் பல அமைச்சரவை பத்திரங்களை சமர்பித்து பெருந்தோட்ட பிராந்தியங்களோடு தொடர்புடைய அமைச்சுக்களின் ஆதரவோடு பாராளுமன்றத்தில் உருவக்கப்பட்ட நிறுவனமே மலைநாட்டு புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையாகும்.

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சரின் பிரத்தியேக செயலாளரின் ஜனாதிபதிக்கான கடிதம் இந்த அரசாங்கம் அதிகார சபையினை அமைச்சின் ஒரு பிரிவாக இணைப்பதற்கான முயற்சியினை உறுதி செய்கின்றது.

இந்த அதிகாரசபை சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு வந்தபோது இன்றைய ஜனாதிபதி உட்பட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்கினார்கள் என்பதை இங்கு நினைவுப்படுத்த விரும்புகின்றேன். அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவோடு உருவாக்கிய அதிகார சபையினை இல்லாமலாக்க நினைப்பது மலையக மக்களுக்கு செய்யும் வரலாற்று துரோகமாகும்.

மலையக மக்கள் மீது அதிக அக்கறை உள்ளதாக காட்டிக் கொள்ளும் இந்த அரசாங்கம் உண்மையான அக்கறை இருந்தால் இந்த நிறுவனத்தினை இன்னும் சக்திமயப்படுத்தி அதனூடாக மலையக மக்களுக்கு சேவை செய்ய முன்வர வேண்டும். அதைவிடுத்து அதிகார சபையினை அமைச்சின் ஒரு உப பிரிவாக கொண்டுவர நினைப்பது இவர்களின் போலி அக்கறையினை காட்டுகின்றது.

இவ்வாறான விடயம் நடக்கின்றபோது இந்த அரசாங்கத்தில் பங்காளியாக இருக்கும் பிரதி அமைச்சரும், மலையக பாராளுமன்ற உறுப்பினர்களும் மௌனிகளாக இருப்பது இந்த அரசாங்கத்தை நம்பி வாக்களித்த மலையக மக்களுக்கு செய்யும் துரோகம்.

போராடி பெற்ற அதிகார சபையினை போராடி தக்கவைத்துக்கொள்ளும் நிலைக்கு இந்த அரசாங்கம் தள்ளிவிடக்கூடாது -என்றுள்ளது. (அ)

# சர்வதேச தற்கொலை தவிர்ப்பு விழிப்புணர்வு மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, செப். 11

சர்வதேச தற்கொலை தவிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்வுகள் நாடளாவிய ரீதியில் நேற்று இடம்பெற்றன. மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆர். முரளீஸ்வரனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பாடசாலை மட்டத்திலான விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம் பெற்றன.

மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலக முறைசாரா கல்வி பிரிவின் ஏற்பாட்டில் அமிர்த கழி சித்தி விநாயகர் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான தற்கொலை தவிர்ப்பு தொடர்பான விழிப்புணர்வு நேற்று நடைபெற்றது.

அழகையா ஜெகநாதன் ஒருங்கிணைப்பில் அமிர்தகழி சித்தி விநாயகர் மகா வித்தியாலய அதிபர் வி.முருகதாஸ் தலைமையில் இடம்பெற்றநிகழ்வில் வளவாளராக உளநல ஆலோசனை மருத்துவ நிபுணர் வைத்தியர் ஜூடி ரமேஷ் ஜெயக்குமார் கலந்து கொண்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதிகளின்...

ஜனாதிபதியின் மனைவி ஆகியோருக்கு வழங்கப்பட்ட இல்லம் அல்லது அதற்காக மாதாந்த கொடுப்பனவு இரத் துச் செய்யப்படும்.

இதேபோன்று, சட்டத்தின் 3ஆம் பிரிவின்படி முன்னாள் ஜனாதிபதி, விதவையான ஜனாதிபதியின் மனைவியின் செயலாளருக்கான மாதாந்த கொடுப்பனவு, உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் வேறுவசதிகள் இரத்துச் செய்யப்படும்.

சட்டத்தின் 4 ஆம் பிரிவு ஏற்பாடுகளின்படி முன்னாள் ஜனாதிபதியின் கைம்பெண்ணுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த ஒய்வூதியம் என்பன இரத்துச் செய்யப்படும்.

இந்த சட்டமூலத்தை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நேற்றைய தினமே சான்றுரைப்படுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வலி.வடக்கு...

உறுப்பினர் சி. சிறீதரன் கேட்டுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வலி. வடக்கில் 13 கிராம அலுவலர் பிரிவுகளில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மக்கள், பலாலி இராணுவ முகாம் இராணுவத்தினரின் வருகை மற்றும் எறிகணை தாக்குதல்களால் 1990.06.15ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமது சொந்த மண்ணிலிருந்து இடம் பெயர்ந்தார்கள்.

இந்த இடப்பெயர்வு நிகழ்ந்து 35 வருடங்கள் கடந்தும் - நாட்டில் போர் முடிவடைந்து 16 வருடங்கள் நிரம்பிய பின்னரும் இன்றுவரை மீள்குடியேற்றப்படாத நிலையில் அந்த மக்கள், இந்த நாட்டுக்குள்ளேயே இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் ஏதிலிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 700 ஏக்கருக்கும் அதிக விஸ்தீரணமுடைய காணிகளைக் கொண்ட மயிலிட்டி, பலாலி, வயாவிளான், கட்டுவன், குரும்பசிட்டி, குப்பிழான், தையிட்டி, ஊறணி, தோலகட்டி உள்ளிட்ட பல பேரூர்களைச் சேர்ந்த மக்கள், தமது சொந்தக் காணிகளில் குடியேறும் உரிமை பறிக்கப்பட்டவர்களாகவே இன்றும் வாழ்கிறார்கள்.

ஆட்சி மாற்றங்கள் அரசு மாற்றங்களின் பின்னும் அவர்களது மீள்குடியேற்றம் சாத்தியப்படுத்தப்படாமை பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினரதும் அவர்களது பிள்ளைகளினதும் அடுத்த தலைமுறையினதும் எதிர்காலத்தையே கேள்விக்கு உட்படுத்தியிருக்கிறது - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## பாதுகாப்பு...

இவை கூட்டு மற்றும் தனிப்பட்ட பொறுப்பை அமைச்சரவை அமைச்சர்கள்மீது வைக்கிறது.

ஒரு பிரதி அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் அமைச்சரவை உறுப்பினர் அல்லர். அவர் நேரடி அரசமைப்பு பொறுப்பை ஏற்கவில்லை. அரசாங்கம் , பிரதமர் அல்லது தனிப்பட்ட அமைச்சரவை அமைச்சர்களுக்கு எதிராக மட்டுமே நம்பிக்கையில்லா பிரேரணைகளை அரசமைப்பு சட்டம் அனுமதிக்கிறது. பிரதி அமைச்சர்களுக்கு அத்தகைய ஏற்பாடு எதுவும் இல்லை - என்றார். (அ)

## மனித உரிமைகள்...

அமைக்க இலங்கை தயாராக உள்ளது. சமீபத்தில் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு சென்றமைஅதற்கான தெளிவான உதாரணம். இலங்கை, சர்வதேச மனித உரிமைகள் கடமைக்கு ஏற்ப தேசிய சட்டங்களை திருத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. பொது நிர்வாகத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தேசிய நல்லிணக்கத்தின் நோக்கில் முன்னேற்றம் காணப்படுகிறது என்று கூறினார். (அ)

## பாதிக்கப்பட்ட....

ஆகியோர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது அமர்வில் வெளியிட்ட அறிக்கைக்குப் பதில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் தொடர்பான பல முக்கிய கரிசனைகளுக்கு அரசு இன்னும் பதிலளிக்கவில்லை என்பதில் எமது ஆழ்ந்த ஏமாற்றத்தை இங்கு பதிவு செய்கிறோம்.

இந்த அரசாங்கம் பதவியேற்றபோது பல வாக்குறுதிகளை வழங்கியது. எனினும், ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்று ஒரு முழு ஆண்டு ஆன பின்னும், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் முதல் படி கூட இன்னும் எடுக்கப்படவில்லை.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வலுப்படுத்தல் நாட்டின் அபிவிருத்திக்கு அவசியம் எனக் கூறினாலும் எளிதில் செய்யக்கூடிய முயற்சிகள்கூட இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. பல உறுதிமொழிகள் வழங்கப்பட்ட போதிலும், பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் நீக்கப்படவில்லை. அந்தச் சட்டத்துக்கு மாற்றாக எந்தப் புதிய சட்டமும் கொண்டு வரமாட்டோம் என்ற உறுதியான நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்திருந்த போதிலும், தற்போது வெளிவிவகார அமைச்சர் பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய சட்டம் கொண்டு வரப்படும் என அறிவித்துள்ளார் என்பது வருத்தத்துக்குரியது.

ஆயுதப் போராட்டம் முடிவடைந்து பதினாறு ஆண்டுகளான போதும், எந்த உள்ளகப் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளும் இன்னமும் உருவாக்கப்படவில்லை. இந்தச் சூழலில், பாதிக்கப்பட்டவர்கள் சர்வதேச ஈடுபாட்டை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை.

யாழ்ப்பாணம், செம்மணி பகுதியில் 240 மனித எலும்புக்கூடுகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை சட்டத்துக்குப் புறம்பான கொலைகளாக இருப்பினும் இங்கு கிடைக்கப்பட்ட சான்றுகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் எதுவும் குறிப்பிடவில்லை. இந்த உயிரிழப்புகளை அடையாளம் காண உள்ளூர் நிபுணத்துவம் இல்லாதது நிதர்சனமான உண்மை. இருந்தும், அரசாங்கம் சர்வதேச உதவியை இன்னமும் கோரவில்லை. மனிதப் புதைகுழிகள், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் போன்ற பல விடயங்களிலும் இதே நிலை தொடர்கின்றது.

இந்தியா, மாகாண சபைகள் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்றும் அதிகாரப் பகிர்வு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. மாறாக, இலங்கை அரசாங்கம் தன் எழுத்திலான பதிலில், எல்லை நிர்ணயிப்பு செயல்முறை முடிந்த பிறகு மட்டுமே மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்ற நிலை எடுத்துள்ளது.

இது பல ஆண்டுகள் தேர்தலை தள்ளி வைக்கும் எண்ணப்பாட்டைக் காட்டுகிறது. வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு அரசாங்கம் அளித்த வாக்குறுதியைமீறி, அவர்களின் வாக்குரிமையைத் தொடர்ந்து உதாசீனப்படுதலை காட்டி நிற்கிறது. - என்றுள்ளது. (அ)

## புதிய....

நியமிக்கப்பட்ட குழு நேற்று முன்தினம் அமைச்சில் ஒன்றுகூடியபோது குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத்ன இந்தத் தகவலைத் தெரிவித்தார். புதிய வரைவில் மீதமுள்ள சிக்கலான பகுதிகளில் அடையாளம் காணும் பணிகள் இந்த வாரத்தில் முடிக்கப்படும் எனவும் அதற்காக குழு தினமும் கூடும் என் றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, குழுவால் செய்யப்படும் மாற்றங்களை இணைத்து சட்ட வரைஞர் திணைக்களம் சட்டமூலத்தை உருவாக்கும் என்று குழு தலைவர் தெரிவித்துள்ளார். (அ)

## '13' முழுமையாக...

பிரிட்டன், கனடா, மலாவி, மொன்டினீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் இணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது அமர்வில், இலங்கை தொடர்பாக இந்த புதிய தீர்மான வரைவை சமர்ப்பித்துள்ளன.

'இலங்கையில் மீள் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல்' என்ற தலைப்பிலான இந்த வரைவு சம்பந்தப்பட்ட தரப்புகளின் கலந்தாய்வுகளின் பின்னர் இறுதி செய்யப்படும் எனத் தெரிகின்றது.

இதில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு,

இலங்கை அரசாங்கம் அரசியல் அதிகாரப் பகிர்வு குறித்த தனது உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள் வதோடு, இது நல்லிணக்கத்துக்கும் அதன் மக்கள் தொகையின் அனைத்து உறுப்பினர்களும் மனித உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கும் முக்கியமானதாகும் என்பதையும் சுட்டிக் காட்டுகிறோம்.

மேலும், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதன் மூலம் உள்ளூர் நிர்வாகத்தை மதிக்கவும், வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் உட்பட அனைத்து மாகாண சபைகளும் இலங்கை அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின்படி திறம்படச் செயல்படுவதை உறுதி செய்யவும் அரசாங்கத்தை ஊக்குவித்து வலியுறுத்துகிறோம்.

கடுமையான பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான முயற்சிகளை வரவேற்று, இராணுவ மயமாக்கல், ஊழல், நிர்வாகத்தில் பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ் பிரயோகங்களுக்கு தண்டனை விலக்கு உள்ளிட்ட அந்த நெருக்கடிக்கு பங்களித்த அடிப்படை நிர்வாக காரணிகள் மற்றும் மூல காரணங்களை நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவத்தை அடிக் கோடிட்டுச் சுட்டிக் காட்டுகிறோம்.

இலங்கையில் உள்ள அனைத்து தனிநபர்களும் மதம், நம்பிக்கை அல்லது இனத் தோற்றம் போன்ற எந்த வகையான வேறுபாடும் இல்லாமல் தங்கள் மனித உரிமைகளை முழுமையாக அனுபவிக்க உரிமை உண்டு என்பதையும், மனித உரிமைகளை அனுபவிப்பதற்கு அமைதியான மற்றும் ஒருங் கிணைந்த அமைப்பின் முக்கியத்துவத்தையும் மீண்டும் உறுதிப்படுத்த வேண்டுகிறோம்.

இலங்கையில் அனைத்து தரப்பினராலும், தமிழீழ விடுதலைப் புலிகளால் செய்யப்பட்ட துஷ்பிரயோகங்கள் உட்பட சகல தரப்பினராலும் செய்யப்பட்ட அனைத்து மனித உரிமைகள் மீறல், துஷ்பிரயோகங்களுக்கும் ஒரு விரிவான பொறுப்புக்கூறல் செயல் முறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறோம்.

பொருந்தக்கூடிய இடங்களில், மனித உரிமைகள் சட்டத்தின் மொத்த மீறல்கள் அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிப்பது உட்பட, மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் தங்கள் தொடர்புடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கான நாடுகளின் பொறுப்பை நினைவுபடுத்துகிறோம்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டையும் அதை இரத்து செய்வதை ஆராய்வதற்காக ஒரு குழுவை நியமித்ததையும் கவனத்தில் கொண்டு, அதே நேரத்தில் அந்தச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல்கள், முக்கியமாக தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களுக்கு எதிராக தொடர்வது குறித்துக் கவலை தெரிவித்து, மேலும், இந்த சட்டத்தின் பயன்பாட்டுக்கு ஒரு தடையை விதிக்கவும் அதை இரத்துச் செய்வதை விரைவுபடுத்தவும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான எந்தவொரு சட்டமும் சர்வதேச சட்டத்திலிருந்து எழும் அரசின் கடமைகளுக்கு முழுமையாக இணங்குவதை உறுதி செய்யவும் அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பல வழக்குகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. இதனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள நீண்டகால துன்பத்தையும் வெளிப்படுத்தி இலங்கையில் பல புதைகுழிகள் உள்ள இடங்களை அடையாளம் காண்பதை ஒப்புக்கொண்டு, அவை தொடர்பில் போதுமான வளங்களுடன் தொடர்ச்சியான பணிகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், காணாமல் போனவர்கள் பற்றிய பணிமனை சுயாதீனமான மற்றும் பயனுள்ள செயல்பாட்டின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி, மேலும் சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப தோண்டி எடுக்கும் பணிகளை மேற்கொள்ள போதுமான நிதி, மனித மற்றும் தொழில்நுட்ப வளங்களை உறுதி செய்வதற்கு சர்வதேச ஆதரவை முன்கூட்டியே பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

ஒரு சுயாதீனமான பொது வழக்குத் தொடுநர் அமைப்பை நிறுவுவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டைப் பாராட்டுடன் ஒப்புக்கொண்டு, மேலும் இது முழுமையாக சுதந்திரமாகவும், பயனுள்ளதாகவும், வலுவாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி, மேலும், கடந்த தசாப்தங்களில் செய்யப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பான வழக்குகள் தொடர்பாக ஒரு சுயாதீனமான சிறப்பு ஆலோசகரைக் கொண்ட ஒரு நீதித்துறை பொறிமுறையை உருவாக்குவது குறித்து பரிசீலிக்க அரசாங்கத்தை ஊக்குவிக்கிறோம். - என்றுள்ளது.

(அ)

## வீட்டிலிருந்து...

நிறைவேறியது. இதைத் தொடர்ந்து சபாநாயகர் நேற்றைய தினமே அந்த சட்டமூலத்தை சான்றுரைப்படுத்தினார். இதனால், சட்டம் உடனடியாகவே நடைமுறைக்கு வந்தது.

இந்த நிலையில், மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பில் முன்னர் பெரும் விவாதம் எழுந்திருந்தது. அதைப் பராமரிப்பதற்கான பெரும் பொதுச் செலவை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கேள்வி எழுப்பியிருந்தார். மகிந்தவின் இல்லத்துக்கான மாத வாடகை மட்டும் 46 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக இருந்ததாக அவர் கூறியிருந்தார்.

சட்டம் நிறைவேற முன்னரே தனக்கான வீட்டைத் தேடி வந்த மகிந்த ராஜபக்ஷ தற்போது அதனை விரைவுபடுத்தியுள்ளார். தனது பொது நிகழ்வுகளை எளிதாக்க போதுமான இடவசதி கொண்ட வீட்டையே அவர் தேடுகிறார் என்று கூறப்படுகிறது. (ஐ)

## மன்னார்....

செயலாளர் அனில் ஜாசிங்க ஆகியோர் இதற்கான ஒப்பந்தத்தில் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டனர்.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந்தத் திட்டம் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கு 2 மாடி கட்ட டம், அந்த அலகுக்கு தேவையான அனைத்து மருத்துவ உபகரணங்களையும் கொள்முதல் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தத் திட்டம் மன்னார் பொது மருத்துவமனையின் ஏ மற்றும் ஈ பிரிவின் முக்கியமான தேவையை நிவர்த்தி செய்யும். இது சராசரி தினசரி உட்புற நோயாளிகளின் எண்ணிக்கைக்கும் கிடைக்கக்கூடிய படுக்கை வலிமைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதன் மூலம் மருத்துவமனையில் மருத்துவ வசதிகளை வலுப்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## கொழும்பு- காத்மண்டு சேவைகளை நிறுத்திய சிறீலங்கன் எயார்லைன்ஸ்

கொழும்பு, செப். 11

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கும், நேபாளத்தின் காத்மண்டு விமான நிலையத்துக்குமிடையிலான அனைத்து விமான சேவை நடவடிக்கைகளையும் நிறுத்துவதாக சிறீலங்கன் எயார் லைன்ஸ் அறிவித்துள்ளது.

நேபாளத்தில் நிலவும் பதற்றமான சூழ்நிலையைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சமூக ஊடகங்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடை தொடர்பாகத் தலைநகர் காத்மண்டு உட்பட நேபாளம் முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் அங்கு பதற்றமான சூழ்நிலை அதிகரித்ததையடுத்து நேபாளத்தின் ஜனாதிபதியும், பிரதமரும் பதவி விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை

### ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, செப். 11

**சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.**



பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சி கொண்டு வந்த நம்பிக்கையில்லா பிரேரணை குறித்த முடிவை சபாநாயகர் முன்வைத்த போது பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படாவிட்டால், சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படும் என்று மத்துமபண்டார மேலும் கூறினார்.

இருப்பினும், இதற்கு பதிலளித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மூலம் எதிர்க்கட்சி ஒரு போதும் சபாநாயகரை தோற்கடிக்க முடியாது என்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (அ)

## எல்ல பஸ் விபத்தின்போது துணிச்சலுடன் செயல்பட்ட பிரிட்டன் பெண் கௌரவிப்பு

கொழும்பு, செப். 11

எல்ல-வெள்ளவாய வீதியில் அண்மையில் நேர்ந்த பஸ் விபத்தின் போது துணிச்சலான நடவடிக்கை எடுத்தமைக்காக பிரிட்டன் பெண் ஒருவர் நேற்று முன் தினம் பாராளுமன்ற வளாகத்தில் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி இரவு இடம்பெற்ற குறித்த விபத்தில் காயமடைந்த பயணிகளுக்கு முக்கியமான உதவிகளை வழங்கியதற்காக எமி விக்டோரியா கிப் என்ற குறித்த பிரிட்டன் பெண் சுற்றுலா அமைச்சினால் பாராட்டப்பட்டார்.

அவசர சேவைகள் வரும் வரை பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி மற்றும் ஆறுதல் அளிப்பதற்காக அவர் சம்பவ இடத்தில் முன்வந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தநிலையில், பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற அவருக்கான கௌரவிப்பு நிகழ்வில் கருத்து வெளியிட்ட சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் ருவான் ரணசிங்க "மனிதகுலத்திற்கு எல்லைகள் எதுவும் தெரியாது என்பதை அவரது தன்னலமற்ற செயல்கள் நமக்கு நினைவூட்டுகின்றன" என்று குறிப்பிட்டார்.



## பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் உரிமையாளர்களல்லர்!

### சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன

கொழும்பு, செப். 11

பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் உரிமையாளர்கள் அல்ல, மாறாக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தற்காலிகப் பொறுப்பாளர்கள் என்பதால் அவர்களும் நாட்டின் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் என சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பு ஆனந்தா கல்லூரியின் மாணவர் பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் பாராளுமன்றத்தின் சபாநாயகர் தலைமையில் கொழும்பு ஆனந்தா கல்லூரி ஓல்கட் மண்டபத்தில் நடைபெற்ற போதே அவர் இக்கருத்துக்களை தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த சபாநாயகர், அரசியல் பாதகமான விடயம் அல்ல என்றும், அரசியல் மூலம் மக்களின் இறைமையை பிரதிநிதித்துவப்படுத்தி, மக்களுக்காகவும், சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் தலைமைத்துவம் வழங்குவதாகவும் குறிப்பிட்டார். (அ)

## பிரதி அமைச்சர்களுக்கு எதிராக பிரேரணை கொண்டு வரமுடியும்!

கொழும்பு, செப். 11

பிரதியமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரமுடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட 32 எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையை நிராகரித்த சபாநாயகரின் முடிவுக்கு பதிலளிக்கும் விதமாக அவர் இந்த கருத்தை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரதி அமைச்சர்களுக்கு எதிரான பிரேரணைகள் குறித்து எர்ஸ்கைன் மே, கவுல் எண்ட் ஷக்தர் போன்ற பாராளுமன்ற மரபுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் பிரதி அமைச்சர் ஒருவர் நிர்வாகத்தின் ஒரு பகுதியாக மாறும்போது, நிலையியற் கட்டளைகளில் குறிப்பிடப்படவில்லை என்று கூறி நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வருவதை நிராகரிக்க முடியாது.

நிலையியற் கட்டளைகளில் அமைச்சர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைகள் தொடர்பான குறிப்பிட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லை என்றாலும், மௌனம் சாதிப்பது அவற்றைக் கொண்டுவர முடியாது என்று அர்த்தமல்ல.

அரசியலமைப்பின் 46 (1) ஆவது பிரிவின்படி, பிரதி அமைச்சரொருவர் நிர்வாக அதிகாரங்களைப் பயன்படுத்துவதால், அத்தகைய நம்பிக்கையில்லா பிரேரணைகளைக் கொண்டுவருவது ஒரு பாரம்பரியமாகும் என்பதுடன் அது ஒரு வெஸ்ட்மின்ஸ்டர் மரபுமாகும்.

குறிப்பாக பிரிவு 45 (3) இன் கீழ், ஒரு பரந்த அரசியலமைப்பு கட்டமைப்பின் மூலம் நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைக்க வாய்ப்பு உள்ளது.

பாராளுமன்ற நடைமுறைகள் தொடர்பான முன்னுதாரணங்களை சபாநாயகர் கலந்தாலோசித்திருந்தால், பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டிருக்கலாம்.

சட்டமா அதிபரின் ஆலோசனை மற்றும் பாராளுமன்ற செயலக பணியாளர்கள் வழங்கிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். இவற்றைக் கலந்தாலோசித்து எதிர்க்கட்சியின் கருத்துக்களை சபையில் சமர்ப்பிக்க வாய்ப்பளிக்கவேண்டும்-என்றார். (அ)

## 500 மில்லியன் அமெ. டொலருக்கு நிகரான கடனை யுவானில் பெறுகிறது இலங்கை

கொழும்பு, செப். 11

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க இலங்கை, 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நிகரான சீன யுவான் மதிப்பிலான கடனைப் பெற உள்ளது.

தொலைபேசி நேர்காணலொன்றில் ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ இதனை தெரிவித்ததாக புளூம்பேர்க் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மத்திய அதிவேக நெடுஞ்சாலை கட்டுமானப் பணிகள் இந்த மாத இறுதியில் மீண்டும் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன்,இந்தத் திட்டம் முடிவடைய இன்னும் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் தேவைப்படுகிறது.

புதிய யுவான் மதிப்பிலான கடன், 2019 ஆம் ஆண்டில் சீனாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கியிடமிருந்து இலங்கை கடன் வாங்குவதற்கு ஒப்புக்கொண்ட 989 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குப் பதிலீடாகும்.

அதன்படி, இடைநிறுத்தப்பட்ட அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தை மீண்டும் தொடங்க 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சமமான யுவான் மதிப்பிலான கடனை இலங்கை பெற உள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த திட்டத்துக்கு அரசாங்கம் மேலதிக நிதியை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளதாக புளூம்பேர்க் தெரிவித்துள்ளது. (அ)

## முக்கிய 15 குற்றங்கள் குறித்து விசாரணை ஆரம்பித்துள்ளது புதிய விசாரணைப் பிரிவு

கொழும்பு, செப். 11

புதிதாக நிறுவப்பட்ட மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகம், நிதிக் குற்றங்கள் மற்றும் சட்ட விதிகள் மீறப்பட்டமை தொடர்பான 15 கடுமையான சம்பவங்கள் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பொதுமக்கள் மற்றும் பிற சட்ட அமுலாக்க அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள் மீதான விசாரணைகளை விரைவுபடுத்துவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகம் அண்மையில் நிறுவப்பட்டது.

விரைவான மற்றும் விசேட கவனம் தேவைப்படும் சிக்கலான மற்றும் உணர்திறன் வாய்ந்த வழக்குகளைக் கையாள்வது இந்த பணியகத்தின் நோக்கமாகும்.

தற்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடமுள்ள பல வழக்குக் கோப்புகள் மற்றும் முறைப்பாடுகள் புதிய பிரிவுக்கு மாற்றப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## வைத்தியசாலையில் கடமைகளுக்கு இடையூறு செய்த வைத்தியர் கைது!

கொல்மும்பு, செப். 11

கண்டியில் தெல்தெனிய வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டிருந்த வைத்தியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இடையூறு விளைவித்ததாகக் கூறப்படும் அதே வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவர் தெல்தெனிய பொலிஸாரால் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டார்.

தெல்தெனிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபரான வைத்தியர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரான வைத்தியர் இதற்கு முன்னரும் வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டிருந்த வைத்தியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இடையூறு விளைவித்து அநாகரிகமாக செயற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட வைத்தியர் தெல்தெனிய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org